முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 20.11.2025

O.S. No. 157/2023

வா.சா-1 இராமசந்திரன்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

எனது அப்பா பெயர் சாமிநாத நாடார். அம்மா பெயர் ருக்மணி ஆகும். வழக்கு சொத்தின் சர்வே எண். 548/15 ஆகும். வேம்பனூர் கிழக்கு கிராமம் ஆகும்., சாமிநாத நாடாருக்கு 7.925 சென்ட் பாத்தியம் என்றால் சரி. எனது அப்பா 8 சென்ட் நிலம் என்று கூறுவார். நான் எனது அப்பாவிற்கு மூன்று ஆண்மக்களும் 4 பெண் மக்களும் ஆகும் .நான் மூத்த ஆண் மகன் ஆகும் 2 வது குணசேகரன் , 3 வது சீனி வாசன் ஆகும்.,

எனது அப்பா 7.925 சென்டை எங்கள் 3 ஆண்மக்களுக்கும் செட்டில் மென்ட் ஆசவணம் எழுதினார் என்றால் சரி எந்த ஆண்டு என்றால் 02.06.1992 ஆகும் ஒரே நாளில் 3 தனித்தனி ஆவணங்களாக பதிவு ெசய்தார் என்றால் சரி. அதில் எனக்கு 2.325 சென்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரி. குணசேகரனுக்கு 2.080 சென்ட் இடம் என்றால் சரி. சீனிவாசனுக்கு 2.070 சென்ட் இடம் என்றால் சரி. எங்கள் மூவருக்கும் சேர்ந்து 6.475 சென்ட் இடம் எழுதி கொடுத்தார் என்றால் சரி. பாக்கி 1 சென்ட் 450 ச, லிங்ஸ் உள்ளது என்றால் சரி. அவரது அனுபவத்திற்காக விட்டுவைத்துள்ளார்.,

எங்கள் மூவருக்கும் எழுதிக்கொடுத்தது போக மீதம் உள்ள 1.45 சென்ட்டை எனது அப்பா கைவசம் வைத்தருந்தார் என்ற விவரத்தை எனது பிராதில் நான் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். சாட்சி தற்போது மீதம் உள்ள 1.450 சென்ட்டை பாதை அவகாசத்திற்காக வைத்திருப்பதாகவும் அதை பிராதில் சொல்லியுள்ளேனா என்ற விவரம் ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். உண்மையில் அந்த மீதம் உள்ள 1.450 சென்ட்

இடத்தை நான் அபகரிக்கக வேண்டி உண்மை சம்பவத்தை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி.யல்ல. நான்மூத்த மகன் என்பதால் ஆவணம் எழுதுவது நீதிமன்றத்திற்கு வருவது போன்ற நடவடிக்கைகள் ஈடுபடுவதும் எனது சொத்துகளை பராமரிப்பது கர தீர்வை செலுத்துவது போன்றவை நான் செய்வேன் என்றாலும் சரியல்ல. எனது அக்கா தான் செய்து வருகிறார். அவரவர் பாகத்திற்கு அவரவர் செய்து வருகிறார்.

எனக்கு எழுதி கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணத்தின் படி போக்குவரத்து நான் செய்யவில்லை என்றால் சரியல்ல. கூட்டு பட்டாவாக உள்ளது. அதில் என் பெயர் உள்ளது. தற்போது வரை உட்பிரிவு செய்யவில்லை. உட்பிரிவு செய்வதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் எடுத்த நடவடிக்கையை எனது பிராதில் செரல்லியுள்ளேனா என்றால் 01.07.2023 ல் மனு கொடுத்ததை நான் சொல்லியுள்ளேன். அந்த விவரத்தை எனது வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

செட்டில்மெண்ட் ஆவண்ங்களின் படி எல்கை நிர்ணயம் செய்யவோ, வரப்பு போடவோ, கல் அமைக்கவோ இல்லை என்றால் சரியல்ல. சர்வேயர் அளந்து எல்லை கற்களை அமைத்து கொடுத்தார். எந்த தேதியில் கல் அமைத்தது என்றால் 2004 ம் வருடம் இருக்கும். மேமற்படி விவரங்களை எனது பிராதில் , முதல் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் ஞபகம் இல்லை. மேற்படி முக்கிய விவரங்களை நான் சொல்லவில்லைல என்பதால் உறுத்து கட்டளை பரிகாரம் கோர எனக்கு அறுகதை இல்லை என்றால் சரியல்ல. குணசேகரன் இறந்ததால் அவரது மனைவியை கட்சி சேர்த்துள்ளேன் என்றால் சரி.

பிரதிவாதி கணவர் இல்லாமல் சுயமாக கூலி வேலை செய்து அவரது 3 பிள்ளைகளை காப்பாற்றி வருகிறார். என்றால் சரிதான். 3 பிள்ளைகள் 20 வயதிற்கு மேற்பட்ட நபர்கள்.

அவர்கள் சுயமாக வேைலைக்கு சென்று சம்பாதித்து வருகிறார். வழக்கில் 0.852 சென்டை நான் எனக்கு பாத்தியம் என்று நான் கேட்கிறேன் என்றால் சரி. அந்த சர்வே எண்ணில் நான் சொல்லியுள்ள 0.852 சென்ட் இடத்தைை பூமியில் அடையாளப்படுத்த முடியுமா என்றால் நான் எல்லை கற்கள் அமைத்து வைத்திருந்ததை பிரதி பிடுங்கி எடுத்து விட்டார். 2005 ல் பிரதி எல்லை கற்களை பிடுங்கி எடுத்து விட்டார் , மேற்படி விவரங்களை நான் பிராதிலோ செரல்லியிள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

எனது இளைய சகோதரி பத்மாவிற்கு திருமணம் ஆகவில்லை என்றால் அப்போது திருமணம ஆகவில்லை 2005 ல் திருமணம் முடிந்து விட்டது. சீனிவாசன் திருமணம் ஆகாமல் குழந்ைைத இல்லாமல் இறந்து விட்டார் என்றால் சரி. சீனிவாசனுக்கு உரிய 2.07 சென்ட் இடத்தை எனது அம்மா ருக்மணி எடுத்துவிட்டடார் என்றால் சரி. ருக்மணி மேற்டபடி 2.07 சென்ட் இடத்தை பத்மாவிற்கு விலை பத்திரம் 30.06.1999 ம் தேதி எழுதிக்கொடுத்தார்.

எனது அம்மா பத்மாவிற்கு எவ்வளவு வீஸ்திரணம் உள்ள இடத்தை எழுதிக்கொடுத்தார் என்பதை இந்த பிராதிலோ முதல் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. உண்மையில் எனது அம்மா பத்மாவிற்கு 2.07 சென்ட் இடத்தை மட்டுமே கொடுக்கமுடியும் என்றாலும் அதற்கு மேல் 1 இன்ச் கூட கொடுக்கமுடியாது என்றாலும் சரிதான். ருக்மணி 2.07 சென்ட்டிற்கும் அதிகமாக இடத்தைபாதை என்று சொல்லியோ, பொது என்று சொல்லியோ பத்மாவிற்கு எழுதி கொடுக்கமுடியாது என்றால் சரியல்ல. பாதை அவகாசம் 3 ஆண்மக்களுக்கும் பாத்தியப்பட்டது அதனை சேர்த்து எழுதிக்கொடுக்க முடியும்.

ருக்மணி, பத்மாவிடம் இருந்து நான் 2.07 சென்ட்டிற்கு அதிகமாக ஒரு இடத்தையும்

எழுதி வாங்க முடியாது என்றால் சரியல்ல. பாதை அவகாசம் உட்பட்ட சொத்து என்பதால் அதை சேர்த்து வாங்க முடியும். பத்மாவிடம் இருந்து 2.775 சென்ட் இடத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் கொடுப்பதற்கு பத்மாவிற்கு உரிமையோ பாத்தியமோ இல்லை என்றாலும் அதிக இடத்தை பெறுவதற்கு எனக்கு உரிடிம இல்லை எனறாலும் சரியல்ல.

7.925 சென்ட் இடமும் முள் புதர்கள் பிடித்து காலிஇடமாக உள்ளதா என்றால் 7.925 சென்ட் இடத்தில் தான் குணசேகரன் கட்டிய வீடு தற்போதும் உள்ளது , அந்த வீட்டில் பிரிதி குடியிருந்து வருகிறார். அந்த வீடானது மொத்த சொத்தின் கிழக்கு அற்றம் என்றால் சரி. அந்த வீடு போக மீதம் இடம் முள்புதர் அடைந்து உள்ளது என்றால் செடியாக உள்ளது. அது என்னுடைய இடம். உண்மையில் பாதை அவகாசம் உள்ள இடத்தை நான் அபகரித்து வைத்துக்கொண்டு அதனை என் வசம் எடுப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்என்றால் சரியல்ல. அவரவருக்கு இடம் உள்ளது.

எனது அப்பா எங்களுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த போது கல் போட்டு பாதை அவகாசம் எற்படுத்தி கொடுத்தாரா என்றால் இல்லை. அவர் தனது இடமாக வைத்திருந்தார். தற்போதும் ஸ்தலத்தில் பாதை இருப்பது தெளிவாகாது என்றால் சரியல்ல. பாதை உள்ளது, அதன் அகலம் தெற்கு அற்றத்தில் 11 அடி உளளே சென்றால் 13 அடிக்கு மேலலேயும் வரும். மேற்படி பாதை அகலததில் கல் ஊன்றி பாதை அவகாசம் போட்டதை எனது பிராதிலோ, முதல் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் ஞாபம் இல்லை . பூமியில் நான் சொல்வது போல் பாதை இல்லை என்றாலும் அங்கு பாதை இருப்பது தெரியாது என்றாலும் சரியல்ல.

பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் படித்து பார்த்தேனா என்றால்

படித்து பார்த்தேன். வழக்கு சொத்தானது மொத்த வீஸ்திரணம் எந்த பாதையும் போடாமல் Joint possession -ல் இருப்பதாகவுவம் பிரதியின் வீடு மட்டும் கிழக்கு அற்றத்தில் இருப்பதாகவும் அதன் விவரம் தெரியவந்துவிடும் என்பதால் ஆணையர் நியமனம் செய்ய நடவடிக்கை எதும் எடுக்கவில்லை என்று எதிர் வழக்குரையில் பிரதி சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

அவ்வாறு சொல்லியபின்னும் நான் ஆணையர் நியமிக்க மனு எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் தேவையில்லை என்பதால் நான் எடுக்கவில்லை. அவர் தேவை என்றால் எடுக்கட்டும். நான் தாக்கல் செய்துள்ள வரைபடம் வா.சா.ஆ 8 உள்ளது போல் வரப்பு போட்டு, கல் போட்டு, பிரிக்கப்படவில்லை என்றால் தற்போது அவ்வாறு தான் உள்ளது. கல்லை பிரதி பிடுங்கி விட்டார். நான் வேறு இடத்தில் வாடகைக்கு உள்ளேன்.

பிரதி அதே இடத்தில் இருப்பதால் கற்களை பிடுங்கி விட்டார். மேற்படி விவரங்களை நான் எனது பிராதிலோ, முதல் விசாணையிலோ சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. வழக்கை திசை திருப்பவேண்டும் என்பதற்காக தவறான வரைபடத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்என்றால் சரியல்ல. வரைபடத்தில் நான் கேட்கும் 0.852 சென்ட் வா.சா.ஆ 8 ல் காண்பிக்கபடவில்லை என்றால் சரிதான். வரைபடம் 1992 ல் செட்டில் மெண்ட் ஆவணத்தின் போது எழுதப்பட்டதாகும். அதனை காண்பிக்கபடவில்லை.

வா.சா.ஆ 8 வரைபடத்தை எங்களது 3 ஆண்மக்களுக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். அப்போது இந்த வரைபடம் இல்லை. எப்போது வா.சாஆ 8 வரைபடம் வரையப்பட்டடது என்றால் ஞாபகம் இல்லை. எங்கள் செட்டில் மெண்ட் ஆவணத்திதன் போது அனைவரையும் வரையப்பட்ட ஆவணம். மேற்படி விவரங்களை எனது பிராதிலோ முதல் விசாணையிலோ

சொரல்லியிருந்தேனா என்றால் ஞாபகம் இல்லை. குணசேகரனுக்கு 4.080 சென்ட் 3 ஆவணங்களின் அேடிப்படையில் பாத்தியம் என்று எதிர் வழக்குரையில் பிரதி செரல்லியுள்ளார் என்றால் சரி. ஆனால் அது தவறாள விவரமாகும். மேற்படி விவரம் தவறானது என்று எனது முதல் விசாரணை யில் மறுத்து சொல்லியுள்ளேனா என்றால் சொல்லலவில்லை பத்திரம் இருப்பதால் நாங்க்ள் சொசல்லவில்லை. குணசேகரனுக்கு செட்டில்மெண்ட் படி 2.08 சென்டும் கிரையப்படி 1 செண்டும் ஆக மொத்தம் 3 .08 சென்ட் மட்டுமே பாத்தியம்.

ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு பினபுறம் 45 சென்ட் இடம் எனது அப்பாவிற்கு பபாத்தியம் என்றால் சரி. அதேபோல் பழையஆற்றுக்கு கிழக்கே நாராயண சுவாமி கோயிலுக்கு அருகில் இடம் உள்ளதா என்றால் எங்களுக்கு அங்கு சொத்துகள் எனக்கும், எனது அப்பாவிற்கும் கிடையாது. நான் அங்கு எந்த சொத்தையும் நான் விற்கவில்லை.

மேற்படி 2 சொத்துகளையும் எனது மேற்பார்வையில் எனது அப்பாவை வைத்து விற்று கிரைய பணம் முழுவதையும் கைவசப்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. அதோபோல் வழக்கு சொத்தையும் நான் அபகரிக்கப்பார்க்கிறேன் என்றால் சரியல்ல. இநத வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை. பத்மாவும் ருக்மணியும் எழுதி கொடுத்த ஆவணத்தின் படி எனக்கு எந்த உரிமையும் எற்படவில்லைஎன்றால் சரியல்ல.

கூட்டாக அனுபவித்து வருவதால் நான் வரூவாய் துறையில் உரிய மனு தாக்கல் செய்து உட்பிரிவு செய்வதற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கஅவேண்டும் என்றாலும் இந்த வழக்கை தாக்கல் ெசய்ய எந்த முகாந்திரமும் இல்லைஎன்றாலும் வழக்கில் நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல பிராது பிரதிவாதியின் செலவுடன் தள்ளுபடி செய்யத்ததக்கது அல்ல என்றாலும் சரியல்ல.